# தைப் பொங்கலும் தமிழர் பண்பாடும்.

தமிழர்களின் தலையாய பண்புகளில் ஒன்று செய்ந்நன்றி மறவாமை. தைப்பண்டிகை எனப்படும் பொங்கல் பண்டிகை தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓர் அறுவடைத் திருவிழாவாகும். உலகில் தமிழர்கள் எங்கெங் கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இவ்விழா விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. தொழில்கள் அனைத்திலும் முதன்மையாக வைத்துப் போற்றப்படுவது உழவுத் தொழில்.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

என்று உழவுத் தொழிலைப் போற்றுவார் வள்ளுவர் . அந்த உழவுத் தொழிலை உயிர் மூச்சாகக் கொண்ட தமிழ் மக்கள் தம் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த இயற்கைக்கும் (சூரியன், காற்று, மழை), தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் முகமாக இவ்விழா கொண்டாடப் படுகிறது. பொங்கல் திருநாள் போகி, தைப்பொங்கல் அல்லது சூரியன் பொங்கல் , மாட்டுப் பொங்கல் மற்றும் காணும் (அ) கனுப் பொங்கல் என நான்கு நாட்கள் கோலாகலமாகக் கொண்டாடப் படும் விழாவாகும்.

**போகிப் பண்டிகை:**

போகியன்று வீட்டிலுள்ள தேவையற்ற பழைய பொருட்களை யெல்லாம் தீயிலிட்டுக் கொளுத்துவார்கள் . இதன் மூலம் நம் மனத்தில் இருக்கும் பகைமை , வெறுப்பு, கோபம் , பொறாமை போன்ற துர்க்குணங்களைப் போக்கி, அன்பு, நட்பு, பாசம், பரிவு , கருணை போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இப்பண்டிகை குறிப்பால் உணர்த்துகிறது . மார்கழி மாதம் கடைசி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடப் படுகிறது .

**தைப்பொங்கல்:**

புதிதாக வாங்கி வந்த மட்பாண்டங்களில் புத்தரிசி, புதுவெல்லம், புத்துருக்கு நெய் சேர்த்து மணக்க மணக்கப் பொங்கல் செய்து சூரிய பகவானுக்குப் படைப்பதே தைத் திங்கள் முதல் நாளில் கொண்டாடும் தைப் பொங்கல். அதுவரை ஏதாவது விரும்பத் தகாத சம்பவங்களும் சங்கடங்களும் இருந்தாலும், அவை யெல்லாம் நம்மை விட்டு நீங்கித் தைத் திங்கள் முதற்கொண்டு நடப்பவை அனைத்தும் புதியனவாக , நல்லனவாக , சர்க்கரைப் பொங்கல் போன்று இனியனவாக இருக்கும். பொங்கி வரும் பால் போன்று மகிழ்ச்சி பொங்கட்டும் என்பது பாரம்பரியமாகக் கருதப்பட்டு வரும் தத்துவமாகும் .
**தை மாதப் பிறப்பில் அறிவியல்:** சூரியனுடைய தெற்கு நோக்கிய சுழற்சி முடிந்து, வடக்கு நோக்கி நகரும் காலம் உத்ராயணம் எனப்படும் . உத்ராயணத்தின் தொடக்கம் தான் தை மாதம் . தை பிறந்தால் வழி பிறக்கும் – தைத்திங்களில் தொடங்கும் எதுவும் தழைத்தோங்கும் .

தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

**மாட்டுப் பொங்கல்:**

இன்றைய நவீன உலகத்தில் உழுதல்,விதைத்தல், களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், கதிர் அறுத்தல், நெற்கதிரிலிருந்து நெல்லைப் பிரித்தெடுத்தல் என அனைத்துச் செயல்களுக்கும் எந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் முந்தைய காலங்களில் இவை அனைத்திற்கும் மனிதனுக்கு உதவியாக இருந்தவை காளை மாடுகள் மட்டுமே. ஆகையினால் அந்தக் கால்நடைகளுக்கு நன்றி கூறும் வகையில் தைத் திங்கள் இரண்டாம் நாளில் மாட்டுப் பொங்கல் கிராமங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் மாடுகளை யெல்லாம் நீராட்டி, கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, கழுத்தில் ஒலிக்கும் மணிகளைக் கட்டி அலங்கரிப்பர். மாட்டுக் கொட்டில்களில் பொங்கலிட்டு மாடுகளுக்கு ஊட்டி விடுவர். பிறகு மஞ்சு விரட்டுக்கு அழைத்துச் செல்வர் .

**கனு (அ) காணும் பொங்கல்:**

தைத் திங்கள் மூன்றாம் நாளில் காணும் பொங்கல் கொண்டாடப்படும். காணும் பொங்கலன்று பெரியவர் சிறியவர் அனைவரும் புத்தாடை அணிந்து உறவினர் நண்பர்களைக் காணச் செல்வர். வயதில் பெரியவர்களிடம் ஆசி பெறுவர். தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர். உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், காளைகளை அடக்குதல் போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி மகிழ்வர்.

**தித்திக்கும் தமிழ் போல**
**எத்திக்கும் பொங்கட்டும்**
**எம் இனிய தைப் பொங்கல்.**

**சர்க்கரைப் பொங்கலின் இனிமையும்**
**செங்கரும்பின் சுவையும்**
**மஞ்சளின் மங்கலமும் கலந்து**
**மிளிரட்டும் உங்கள் எதிர்காலம்.**

**பொங்கும் இன்பம் என்றும் எங்கும் தங்கிட**
**இனிய பொங்கல் நல்வாழ்த்துகள் .**